RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22326

# இரட்டைக்காப்பியங்களில் சமூகப் படிநிலை வளர்ச்சியில் வணிகம்

சா. புவனேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011 தமிழ்நாடு, இந்தியா.

# Trade in the Development of Social Hierarchies in the Dual Epics

S. Bhuvaneswari [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India.

* Corresponding Author: hananya302018@gmail.com

Received: 24-01-2022
Revised: 11-05-2022
Accepted: 03-06-2022
Published: 21-07-2022

## ABSTRACT

Sangam Songs and epics illustrate how the ancient Tamils traded well within and outside the country. In the post-Sangam period, during the period of the Epics, there were bartering methods in the domestic trade. Business flourished in the development of cities. Silappathikaram confirms that every commodity was traded on every street in the cities. From the sale of their products by the common people to the sea trade, evidence could be found. Business activities could also be noticed in Manimegalai following Silappathikaram. Small-scale business practices could be found in the cities. Similarly, professional businesses were also appreciated. People going abroad and doing business using the vessels known as Bengal could correspondingly be observed. The verses of Manimegalai are a demonstration of the fact that they exported and imported expensive goods.

**Keywords:** Trade, Dual Epics, Silappathikaram Manimegalai, Business, Products

## முன்னுரை

சமூகத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் வகையில் ஒன்றிணைந்து வாழ்கின்றனர். குறிப்பிட்டத் தேவைகள் ஒன்றிணையும் நிலையினை ஏற்படுத்துகின்றன. மக்கள் தமக்குள் ஒருங்கிணைந்து கட்டுக்கோப்புடன் செயல்படுவதைத்தான் சமூகம் என்று சமூகவியலார் குறிப்பிடுகின்றனர். திணைசார்ந்த வாழ்விலிருந்து மையமாக உருவாகும் நகர்களில் மக்கள் குடியேறுவதற்கான வாய்ப்புகள் அவர்கள் தம் வாழிடங்களில் விளைவிக்கும் பொருட்களை வேற்று பகுதிகளுக்கு கொண்டு செல்லும் போது நகர்களைச் சென்றடைகின்றனர். பல்வேறு இனக்குழு மக்களும் ஒன்று கூடும் இடமாகவும் பண்பாட்டுக் கலப்பு நிகழும் இடமாகவும் நகரங்கள் மாறின. பொருட்களைப் பண்டமாற்று மூலம் பரிமாறிக் கொள்ளும் பொதுவான இடங்களே நகர்களாக உருவாயின. பழந்தமிழகத்தில் கொற்கை, பூம்புகார், மதுரை போன்ற இடங்கள் சிறந்த வணிக நகரங்களாக இருந்தன எனக் கொள்ளப்படுகிறது. மதுரையின் வீதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளுக்குப் புகழ்பெற்று விளங்கியது. அணிகலன்கள், கூலவீதி என வீதிகள் தோறும் வணிகர்கள் இருந்தனர். அங்கு பல்வேறு பணியாற்றும் தொழில்சார்ந்த மக்களும் இருந்தனர் என்பதைக் காணமுடிகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு காப்பியங்களும் பௌத்த சமயத்தை முன்னிறுத்துகின்றன. பௌத்தர்கள் என்போர் வைசியர்கள் எனப்பட்ட வணிக குலத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். வணிக எழுச்சியின் விளைவாகவே இக்காப்பியங்களில் வணிக குலத்தைச் சார்ந்தவர்கள் தலைமைப் பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளனர். இக்கட்டுரையானது மணிமேகலை காப்பியத்தில் நடைபெற்ற வணிகம் சார்ந்த செய்திகளை எடுத்துரைக்கிறது.

## சமூகப் படிநிலை வளர்ச்சியில் வணிகம்

சமூகம் என்பது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம் ஆகும். பண்பாட்டு நிலையில் வளர்ச்சியடைய அடைய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். சமூகத்தில் மனிதர்கள் ஒன்றிணைந்து வாழத் தொடங்கிய போதே அவர்களுக்குள் பரிமாற்றம் என்பது தொடக்கம் பெற்றிருக்க வேண்டும். தொடக்க நிலையில் ஒருவருக்கொருவர் உழைப்பையே பரிமாறிக் கொண்டிருந்தனர். வேட்டை, மேய்ச்சல், வேளாண்மைச் சமூகக் கட்டங்களில் ஒருவருக்கு தேவைப்படும் பொருள் பிறரிடம் இருக்கும் போது அவரிடம் தன் பொருளைக் கொடுத்து பெறுவது தோன்றியது. இது அடிப்படையில் பண்டமாற்று முறையாக அமைந்தது. பின்பு அதுவே வணிகமாக உருவெடுத்தது எனலாம். வணிகம் பெருகப் பெருக நகரங்கள் உருவாயின. நகரங்களை நோக்கிச் செல்லும் மக்கள் ஓரிடத்தில் தமக்கான பல்வேறு பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியைப் பெற்றனர். இதுவே பண்டமாற்று குறுகிய இடத்தில் பரிமாறிக் கொண்ட நடவடிக்கை வணிகமாக மாறிய நிலையாகும்.

## தமிழரின் வணிகம்

பண்டைத் தமிழர்களின் பண்பாடும் நாகரிகமும் ஓங்கியிருந்ததனை எடுத்துக்காட்டுவனவாக சங்க இலக்கியங்கள் அமைகின்றன. துறைமுகப்பட்டினங்களில் கடல்வாணிகங்கள் நடைபெற்றன என்பதை பாடல்கள் வழி அறியலாம். வணிகத்தில் சிறந்து விளங்கியவர்களாக தமிழர்கள் இருந்தனர். திணை நிலைச் சமுதாயமாக இருந்தாலும் ஒவ்வொரு நிலத்திலும் விளையும் பொருட்கள் வேறு நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்கப்பட்டமையை அறிய முடிகிறது. பொருட்களை மாற்றிக் கொள்வதே வணிகம் எனப்பட்டது. எந்தப் பொருளும் நெல்லினால் மதிப்பிடப்பட்டது. உப்பும் நெல்லும் ஒரே விலையில் இருந்தமையைக் காணமுடிகிறது. "நெல்லும் உப்பும் நேரே யூரீர்" என்ற பாடலடி இதனைக் குறித்து அமைகிறது (Somasundaranar, 1970). சோற்றினை உப்புக்கு ஈடாகக் கொடுத்தமையை "உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு" என்ற பாடலடி உணர்த்துகிறது. இது போல் பல்வேறு பொருட்களை தங்களுக்குள் மாற்றிக் கொண்டனர் என்பதை, "பொருநராற்றுப்படை மூலம் தேனையும், நெய்யையும், கிழங்கையும் கொடுத்து மீனின் கொழுப்பையும், நறவத்தையும் பெற்றுக் கொண்டதையும் கரும்பையும், அவலையும் கொடுத்துக் கள்ளையும், மானிறைச்சியையும் பெற்றுக் கொண்டதையும் அறிகிறோம் முள் போன்ற பற்களையுடைய பாணர் குலப் பெண் கெடிறு எனும் மீனை அகன்ற பெரிய வட்டிலில் எடுத்துச் சென்றாள். அவற்றைப் பெற்றுக் கொண்டு அவ்வட்டி நிறையப் பெரிய பயிற்றினை நிறைத்தனர். இங்ஙனமே பாணர்குலப் பெண்ணிடமிருந்து வரால் மீனைப் பெற்றுக் கொண்டு வட்டி நிறைய ஓராண்டுக்கு முன் விளைந்த நெல்லைக் கொட்டினர் ஆயர் மகளிர் தயிர் கொண்டு வந்த குடம் நிறையப் பாண்டிய நாட்டு மருத நிலத்து அரிவையர் குளநெல்லை நிறைத்தனர்" என்று சங்க இலக்கியத்தில் வணிகம் நடைபெற்றதனை விளக்கியுரைக்கிறார் அ.தட்சிணாமூர்த்தி (Thatchinamoorthi, 2006). கப்பல் வணிகமும் சிறந்து விளங்கியது. அரபு நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பை யவனர் என்ற சொல்லாட்சி வெளிப்படுத்துகிறது. "யவனர் அக்காலத்தில் நடுக்கடலில் பிரயாணஞ் செய்யாமல் கடற்கரை ஓரமாகவே பிரயாணம் செய்தபடியால் அவர்கள் முசிறி முதலான தமிழ் நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து போகப் பல மாதங்கள் சென்றன. அவர்கள் அரபிக் கடலின் ஊடே நடுக்கடலில் பருவக் காற்றின் உதவியினால் பிரயாணஞ் செய்ய அக்காலத்தில் அறியவில்லை. ஆனால் பருவக் காற்றின் உதவியினால் வெகு விரைவில் நடுக்கடலினூடே பிரயாணஞ் செய்யத் தமிழரும் அராபியரும் அறிந்திருந்தார்கள்" எனக் குறிப்பிடுவதிலிருந்து தரையிலும், கடலிலும் தமிழர் வாணிகம் செய்தனர் என அறிய முடிகிறது (Venkatasamy, 2014). பண்டமாற்றுக்களே அக்காலத்தில் வணிக நடவடிக்கையாக இருந்தன. சிலப்பதிகாரத்தில் வணிகம் நடைபெறும் நகர்கள் பல குறிப்பிடப்படுகின்றன. வணிகர்களாலேயே நகர்கள் உருவாயின ஆதலால் அவர்கள் நகரத்தார் என்று அழைக்கப்பட்டார்கள் எனக் குறிப்பிடுவதுண்டு. வணிகர்களின் எழுச்சியையும் அவர்கள் மேலாதிக்கத்தையும் வெளிப்படுத்தும் வகையில்தான் வணிகர்கள் தலைமைப் பாத்திரமாக கொள்ளப்பட்டனர் எனலாம். கடல்வணிகத்திலும், உள்நாட்டு வணிகத்திலும் பல்வேறு பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களாக இருந்துள்ளனர். "தமிழ்நாட்டின் நிலவுடைமைச் சமுதாய அமைப்பும் அதன் பாதுகாவலனும் தலைமைப் பிரதிநிதியுமான அரசனின்

ஆதிக்கம் நிலவி வந்த காலத்தில் இந்த ஆதிக்கத்துக்கு எதிராக செல்வ வளத்திலும், செல்வாக்கிலும் வளர்ந்து வந்த வணிக வர்க்கம் மேலாதிக்கம் செலுத்த விரும்பியது" என்ற கூற்று அரசர்க்கு நிகராக செல்வ வளத்தை உடையவர்களாக வளர்ச்சியடைந்து வந்த வர்க்கமாக வணிக வர்க்கம் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது (Chidambara Ragunathan, 1984). இதே நிலையே மணிமேகலையிலும் காணப்படுகிறது. வணிகம் செய்வோர் பற்பலராக சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகின்றனர். மதுரைக்கு வரும் போது அந்நகரில் கடைத் தெருக்களில் வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் பல வகையான விற்பனையாளர்கள் சுட்டப்படுகின்றனர். "மதுரை மாநகரத்துக் கடைத் தெரு மிக்க சிறப்புடையதாகும். அங்கு பலவகை வண்டிகள் செய்து விற்கப்பட்டன. போர் வீரர் அணியத்தக்க கவசங்கள் விற்கப்பட்டன. சீனம் முதலிய வெளிநாடுகளிலிருந்து கப்பல்களில் வந்த பட்டு வகைகளும், நவமணிகளும் விற்கப்பட்டன. குந்தம், வேல், வாள், முதலிய பலவகைப் போர்க்கருவிகள் விற்கப்பட்டன. அகில், சந்தனம், குங்குமம், கஸ்தூரி முதலிய வாசனைப் பொருள்கள் விற்கக் கடைகள் இருந்தன. பலவகைப் பூக்களைக் கொண்டும் ஒரே வகையான மலர்களைக் கொண்டும் மாலைகளைக் கட்டி விற்றக் கடைகள் காட்சி அளித்தன நெல், தினை, சாமை, தோரை, சோளம், கேழ்வரகு முதலிய கூலவகைகளை விற்ற கடைகள் பல இருந்தன. எள், நெய், தேங்காய், முத்துக் கொட்டைநெய், பசு நெய், முதலியன விற்கும் கடைகள் இருந்தன" என்று இராசமாணிக்கனார் சிலப்பதிகார காலத்தில் மதுரை நகரின் விற்பனைக் கடைகள் இருந்தமையை காப்பியத்திலிருந்து எடுத்துரைக்கிறார் (Rasamanikkanar, 1996). மணிமேகலை காப்பியத்திலும் இத்தகைய பல்வகை விற்பனை சார்ந்த வணிகர்கள் இருந்தனர் என்பதைக் காணலாம். நகர்கள் உருவாவதே வணிகர்களால்தான் ஆதலால் வணிகம் என்பது பண்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்களிப்பைச் செய்கிறது எனலாம்.

## மணிமேகலையில் வணிகம்

இரட்டைக் காப்பியங்கள் என்று போற்றப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் அடுத்தடுத்து நிகழ்கிற கதைகளை உள்ளடக்கியதாகும். கோவலனின் இறப்பை தொடக்கப் பகுதியாகக் கொண்டு விரியத் தொடங்கும் மணிமேகலையில் மணிமேகலையைத் துரத்தும் உதயகுமரன், அவளோடு சுதமதி, அவளுடைய தாய் மாதவி, புத்த மத பள்ளிகள் துறவு வாழ்க்கை, அறவாழ்க்கை, பசிப்பிணித் தீர்த்தல், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கும் நிகழ்வுகள் என கதை கூறப்படுகிறது. இக்கதையில் வணிக நடவடிக்கைகள் பல காணப்படுகின்றன. சீத்தலைச் சாத்தனார் என்ற பெயரில் சாத்து என்பது வணிக நடவடிக்கையைக் குறிக்கக் கூடியதாகும். "நிலவழி வணிகத்தில் ஈடுபடுபவன் சாத்துகன் என்றும் கடல்வழியாக வாணிகம் செய்பவன் நாய்கன் என்றும் அழைக்கப்பட்டமையை அறியமுடிகின்றது. உள்நாட்டு வாணிகமும் கடல் வணிகமும் பண்டைத் தமிழகத்தில் செழித்தோங்கி வளர்ந்தன. வணிகர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கூட்டங் கூட்டமாகச் செல்வர். இக்கூட்டம் சாத்து என்றழைக்கப்பட்டது" என்ற கூற்று இதனை வெளிப்படுத்துகிறது (Malarkodi, 2016).

## சிறுவணிகம்

உள்நாட்டிற்குள் வணிகம் செய்யும் சிறுவணிர்கள் மிக்கு இருந்தனர். அவ்வணிகர்களில் உப்பு விற்போர், மீன் விற்போர் என கடற்கரை சார்ந்தவர்கள் மிகுதியாக இருந்தனர் எனக் காணமுடிகிறது.

"பல்மீன் விலைஞர் வெள்உப்புப் பகருநர்

கள்நொடையாட்டியர் காழியர்

கூவியர் மைந்நிண விலைஞர் பாசவர்

வாசவர்என்னுநர் மறுகும் இருங்கோ வேட்களும்"

என்னும் பாடலடிகள் சிறுவணிகர்களைக் குறிப்பிடுகிறது (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). கடலிலிருந்து கொண்டு வரப்படும் உப்பு, மீன் ஆகியனவற்றை விற்போர் மிகுந்திருந்தனர். அவர்கள் பல மீன்களை விற்றனர். கடலிற் சென்று மீன் பிடித்தல் தொழில் மிக்கிருந்ததால் பலவகையான மீன்கள்

விற்கப்பட்டன என்பது கூறப்படுகிறது. உப்பினை தெருக்களில் சென்று விற்கும் நடைமுறை அக்காலத்தில் இருந்தது. அது போல கள்ளை விற்கும் வலைச்சியர் இருந்தனர். பிட்டு விற்கும் பெண்களும், வெற்றிலை விற்போரும், அப்பம் சுட்டு விற்போரும், இறைச்சி விற்போரும், பஞ்சவாசம் என்னும் வாய் துர்நாற்றத்தைப் போக்கும் பொருள் விற்போரும் அவ்வீதியில் இருந்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இச்சிறு வணிகமானது நகர்களில் இயல்பாக நடைபெறக் கூடியனவாகும். தாம் தயாரித்த அல்லது விளைச்சலில் கிடைத்தனவற்றை நேரடியாக மக்களிடம் சென்று விற்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. உணவுப் பண்டங்களை இன்றைய தேநீர்க் கடைகளைப் போல செய்து விற்றனர் என்பதையும் காணமுடிகிறது. பண்பாட்டு நிலையில் பெரிதும் முன்னேறிய தன்மையை இது காட்டுகிறது.

## தொழில் சார்ந்த வணிகம்

பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் வணிகத்தினை நேரடியாக செய்வதற்கான தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஒரு தொழிலைச் செய்து அதன் மூலம் உற்பத்தியாகும் பொருட்களைத் தாங்களே விற்பதே தொழில்சார்ந்த வணிகம் எனலாம். மரவேலை செய்து அப்பொருட்களை விற்றல், பொம்மைகள் செய்து விற்றல், நகைகள் செய்து விற்றல், அணிமணிகள் செய்து விற்றல், பாத்திரங்கள் செய்து விற்றல், கள் இறக்கி விற்றல், அப்பம் விற்றல், தையல் துணிகளை விற்றல், புட்டு விற்றல், வெற்றிலை விற்றல் எனத் தாம் விளைவித்தப் பொருட்களையும், உற்பத்தி செய்த பொருட்களையும் விற்பதற்கென வீதிகள் இருந்தனவென்பதை உணர்த்துவதாக மணிமேகலையில் பாடல் குறிப்பிடுகிறது.

"செம்பு செய்ஞ்ஞரும் கஞ்ச காரரும்

பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்

மரங்கொ றச்சரும் மண்ணீட்டாளரும்

வரந்தர வெழுதிய வோவிய மாக்களும்

தோலின் றுன்னருந் துன்ன வினைஞரும்

மாலைக் காரருங் காலக் கணிதரும்

நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப

நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்

பாண ரென்றிவர் பல்வகை மறுகும்"

என்னும் பாடலடிகள் குயவர் மட்பாண்டங்கள் செய்து விற்றனர், செம்பு வேலை செய்பவர்களால் அங்கு செம்புப் பாத்திரங்கள் விற்கப்பட்டன என்பதை அறிய முடிகிறது (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). அது போல, வெண்கலம் பொன் அணிகளை செய்வோரும் இருந்தனர். இத்தொழில்கள் அங்கிருந்ததைக் கொண்டு அது சார்ந்த பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன என்பதை உணரலாம். மரவேலை செய்வோரும் சுதை கொண்டு பாவை போன்ற பொம்மை செய்வோரும் இருந்தனர். எனவே மரப் பொருட்களும் பொம்மைகளும் விற்கப்பட்டன. கடவுளுருவங்களை ஓவியங்களாகத் தீட்டித் தருவோரும், தோல் வேலை செய்து உறை முதலியனவற்றை விற்பவர்களும் அங்கு இருந்தனர் என்பதைக் காணமுடிகிறது. செம்மார் என்போர் தையல் செய்து கொடுத்தனர். மாலை தொடுத்து விற்போர், காலக் கணிதம் செய்வோர், கருவி கொண்டு இசைத்து மகிழ்விக்கும் பாணரும் இருந்தனர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். வணிகர்கள் என்ற வகையில் தொழில் சார்ந்த வணிகர்களாக இவர்கள் இருந்தனர். தம் உற்பத்திப்பொருட்களை மக்களிடம் விற்று அதன் மூலம் வருவாய் ஈட்டினர் என்பதனை இதன் மூலம் உணரலாம்.

"பால்வேறாக வெண்வகைப் பட்ட

கூலங் குவைஇய மறுகும்

போகம் புரக்கும் பொதுவர் பொலி மறுகும்

கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை

வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்"

என்னும் பாடலடிகளில் வேறு சில வணிகர்கள் சுட்டப்படுகின்றனர் (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). எண்வகைப்பட்ட கூலங்கள் அதாவது தானியங்களை விற்போர் இருக்கின்ற தெருவாகும். நெல், புல், சாமை, தினை. வரகு, இறுங்கு, தோரை, கழைவிளை என்பன அத்தானியங்கள் ஆகும் என சிலப்பதிகாரப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. இன்பத்தினை விற்கும் பரத்தையர் நிறைந்த வீதியாகவும் காணப்படுகிறது. இன்பத்தினை விற்றல் என்னும் சொல்லாடல் அக்காலத்தில் இருந்தமையைக் கொண்டு பரத்தமை என்பது உடல் விற்றல் அல்ல என்பதையும் அது இன்பத்தினைக் கொடுத்து அதற்கு விலை வைக்கும் தொழில் எனக் கூறுவதைக் காணலாம். நகர உருவாக்கத்தினால் வாணிகம் பெருகுவதைப் போலவே நகர்களில்தான் பரத்தமையும் உருவாக்கம் பெறுகிறது. எனவே இன்பத்தினை விற்கும் பரத்தையர் வணிகச் செயல்பாட்டினை உடையவராகின்றனர். நுண்ணிய நூலினால் ஆன ஆடைகளை நெய்து விற்போரும் அத்தெருவில் காணக்கிடைக்கின்றனர். துணி நெய்து விற்பதில் தேர்ந்தவர்கள் கச்சிமாநகரில் இருந்தனர். அவர்கள் மிகவும் மெல்லிய ஆடைகளை நெய்து அதனை விற்றனர் என்பதும் கூறப்படுகிறது.

## கடல் வாணிகம்

உள்நாடுகளில் பெரும்பாலும் பண்டமாற்று வாணிகம் நிகழ்ந்தது போல கடல்வழி வாணிகமும் அக்காலத்தில் பெரிதும் காணப்பட்டது. வங்கத்தில் சென்று வேறு பகுதிகளுக்குச் சென்று வணிகத்தில் ஈடுபடுவது வழக்கமாகக் காணப்பட்டது. சாவக நாட்டிலிருந்து வந்தோர் ஆபுத்திரனை வணங்கினர். அவர்கள் மரக்கலங்களில் வந்தனர் என்பதால் கடல் போக்குவரத்து சாவக நாட்டிற்கு இருந்தது சுட்டப்படுகிறது. ஆபுரத்திரன் கடலில் சென்ற போது கப்பல் காற்று விசையாக அடித்ததால் மணிபல்லவத்தில் ஒருநாள் தங்கியது. அங்கு ஆபுத்திரன் இறங்கிக் கொண்டான் எனக் கூறப்படுகிறது. "மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச் சாவக நல்நாட்டுத் தண்பெயல் மறுத்தலின் "(மணி. பாத்திர.73-74) என்று ஆபுத்திரனை சாவக நாட்டினர் வணங்கியதும்,

"மால்இதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்

தங்கியது ஒருநாள் தான் அங்கு இழிந்தனன்

இழிந்தோன் ஏறினன் என்று இதை எடுத்து

வழங்கு நீர் வங்கம் வல்இருள் போதலும்"

என்ற பாடல் மணிபல்லவத்திற்கு கப்பல் சென்றதையும் அக்கப்பல் காற்றின் விசையால் பாய் அறுந்து வீழ்ந்து மணிபல்லவத்தில் ஒரு நாள் தங்கியதையும் குறித்து அமைகிறது (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). அங்கு ஆபுத்திரன் இறங்கிக் கொண்டான் என்றும் கூறப்படுகிறது. பழங்காலத்தில் வேற்று நாடுகளுக்கும் கடற்கரையோர பகுதிகளுக்கும் கப்பலில் பயணம் செய்து ஆங்காங்கு வணிகம் செய்தனர். அதற்காகவே வங்கம் என்னும் வணிகத்திற்குப் பயன்படுத்தும் கப்பல் பயன்படுத்தப்பட்டது. வங்கத்தில் சென்றனர் என்பது வணிகத்தின் பொருட்டே எனக் கொள்ளலாம். சாதுவன் என்னும் வாணிகன் வங்கம் என்னும் கப்பலில் வாணிகத்திற்குச் செல்லும் மக்களுடன் தானும் சென்று கொண்டிருக்க கப்பல் முறிந்து நாகர்கள் இருக்கும் தீவிற்குச் சென்று விடுகிறான் எனக் கூறப்படுகிறது. வணிகத்தின் பொருட்டு செல்வதால் "வங்கம் போகும் வாணிகர் தம்முடன் தங்கா வேட்கையின் தானும் செல்வுழி" என்னும் பாடலடிகள் வாணிகர்கள் கப்பலில் சென்றமையை உணர்த்துகின்றன. நாகர்களிடம் அகப்பட்ட சாதுவன் மீண்டும் ஒரு வணிகனின் கப்பலில் தம் சொந்த இடத்திற்கு வந்து விடுகிறான் (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007).

"சந்திர தத்தன் எனும்ஓர் வாணிகன்

வங்கம தன்னொடும் வந்தனன்"

என்ற பாடலடிகள் இதை உணர்த்துகின்றன (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). வணிகத்திற்காகவே கப்பலில் செல்லும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததை இக்கதைகள் உணர்த்துகின்றன. மரக்கலங்களில் சென்றோர் விலையுயர்ந்த பொருட்களை விற்பனைக்காகக் கொண்டு சென்றனர் என்றும் சந்திரதத்தனைத் தாம் உயிருடன் விட்டு விடுவதாகும். பிற மரக்கலங்களில் வந்தவர்களைக் கொன்று தின்று விடுவோம் என்றும் அவர்களது கலங்களில் இருந்த பொருட்களே இவை என்றும் நாகர்கள் சுட்டுகின்றனர்.

"பண்டும் பண்டும் கலம்கவிழ் மாக்களை

உண்டோம் அவர்தம் உறுபொருள் ஈங்கு இவை

விரைமரம் மென்துகில் விழுதிக் குப்பையோடு

இவைஇவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து

சந்திரதத்தன் எனும் வாணிகன்

வங்கம் சேர்ந்ததில் வந்து உடன்ஏறி"

என்னும் பாடலடிகளில் இது உணர்த்தப்படுகிறது (Venkatasamy Naattar & Avvai Duraisamy Pillai, 2007). உனக்கேற்ற அரிய பொருள்களைக் கொண்டு செல்க என்று நாகர்கள் சந்திர தத்தனிடம் கூறினார்கள். சந்தன மரம், மெல்லிய ஆடைகள் சிறந்த பொருட்களுமாகிய இவற்றைக் கொள்க என்றனர். சந்திரதத்தனும், சாதுவனும் கப்பலில் வந்து விடுகின்றனர். முன்னர் மரக்கலங்களில் சென்றவர்கள் வாணிகத்திற்காகக் கொண்டு சென்ற பொருட்களையே தாம் குவித்து வைத்திருந்து அவற்றை எடுத்துக் கொள்ள சொல்கின்றனர் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பினை மேற்கொண்டிருந்த தமிழர்கள் இடையில் ஏற்படும் ஆபத்துக்களையும் சந்தித்தனர் என்பதை அறிய முடிகிறது. மணிமேகலையில் கச்சி மாநகர் புக்க காதையில் நகர் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கும் வணிக நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அக்காலத்தில் சிறு வணிகர்கள் முதல் தொழில் செய்து அவற்றை விற்குத் தம் வாழ்வை நடத்துபவர்கள் வரையில் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது. கப்பல்களில் பயணம் செய்து வணிகத்தில் ஈடுபட்டமையையும் காணமுடிகிறது.

## முடிவுரை

பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் உள் நாட்டு வணிகத்திலும் அயல்நாட்டு வணிகத்திலும் சிறந்து விளங்கினர். பண்டமாற்று முறையில் நடைபெற்ற வணிகம் பின்னர் பணத்தின் பொருட்டு நடைபெற்றிருக்கிறது என்பதைக் காணலாம். சிலப்பதிகார காலத்திலும் அதையொட்டிய மணிமேகலை காலத்திலும் வணிகர்களின் ஆதிக்கம் மிக்கிருந்தது என்பதை அறியமுடிகிறது. பௌத்த, சமண எழுச்சியானது வைசியர்களின் எழுச்சியெனவே கொள்ளப்படுகிறது. அரசனுக்கு நிகராக செல்வ வளம் உடையவர்களாக வணிகர்கள் இருந்தனர். சீத்தலைச் சாத்தனார் என்ற பெயரிலேயே அவர் ஒரு வணிகர் என்பது புலப்படுகிறது. சிறு வணிகர்கள், தொழில் செய்து அதனை விற்று பிழைப்பவர்கள், எண்வகை தானியங்களை விற்பவர்கள் எனப் பலரும் நகரில் ஒவ்வொரு வீதியிலும் இருந்தனர். இன்பம் விற்றுப் பிழைப்போரும் இருந்தனர். கப்பல் வணிகம் பெருகியிருந்தது. கப்பல்கள் இடையில் நின்று விடுவதும் அல்லது விபத்துக்குள்ளாவதும் நாகர்கள் வாழும் தீவில் வணிகக் கப்பல்கள் சிக்கிக் கொள்வதால் வணிகக் பொருட்களை குவித்து வைத்திருப்பதும் கூறப்படுகிறது. இவ்வாறு வணிகம் என்பது உள்நாட்டிலும் வெளிநாடுகளுடனும் சிறந்து விளங்கியது.

## References

Chidambara Ragunathan, T.M., (1984) Ilangovadikal Yar?. Meenakshi Puthaga Nilayam, Madurai, India

Malarkodi, S., (2016) Samugaviyal Nokil Manimegalai, Meyyappan Pathipakam, Chithambaram, India

Rasamanikkanar, M., (1996) Silapathikaram Katchigal, Vetri Achakam, Chennai, India

Somasundaranar, P.V., (1970) Agananooru, South India Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Thatchinamoorthi, A., (2006) Tamilar Nagarigamum Panpadum, Indhinai Pathipagam, Chennai, India

Venkatasamy Naattar, N.M., Avvai Duraisamy Pillai, S., (2007) Manimekalai Moolamum Uraiyum, Saradha Publications, Chennai, India

Venkatasamy, M.S., (2014) Palangala Tamilar Vanikam, New Century Book House Pvt Ltd, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License